சார்பு நீதிமன்றம், பரமத்தி.
முன்னிலை திரு.எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16–ஆம் நாள் வியாழக்கிழமை

IA.12/2026, IA.13/2026 in O.S.No. 66/2020

சண்முகம் ... மனுதாரர்/பிரதிவாதி

/எதிர்/

கொழந்தைவேலு ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுக்கள் 08.04.2026–ஆம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.பி.மணிமேகலை அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

பொதுவான உத்தரவு

இம்மனுக்கள், அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கட்சியை நிரூபணம் செய்ய கடந்த 03.02.2026–ம் தேதி முடித்து வைக்கப்பட்ட DW1 சாட்சியை Recall செய்ய உத்தரவிடவேண்டியும், மேற்படி வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு கட்சியை நிரூபணம் செய்ய கடந்த 03.02.2026–ம் தேதி முடித்து வைக்கப்பட்ட DW1 சாட்சியை Re open செய்ய உத்தரவிடவேண்டியும், கட்டளை 18, விதி 17, மற்றும் 151 C.P.C.–ன் கீழ் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2. 2–மனுக்களின் சுருக்கம்,

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கு அண்டிமான்டின் பேரில் தொகை கிடைக்கவேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி DW1–ஆக முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். பின்னிட்டு குறுக்கு விசாரணைக்காக கடந்த 03.02.2026–ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி தேதியில் மனுதாரரும், அவரது தந்தையான ஒ.எஸ்.65/2020–வழக்கின் பிரதிவாதியான, இம்மனுவின் மனுதாரரின் தந்தையான முத்துசாமி என்பவருக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டுவிட்டதால் மனுதாரரின் தந்தையை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டதால், மனுதாரரால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. இதனால், நீதிமன்றம் அழைத்தும் மனுதாரர் ஆஜர் இல்லாததால் DW1 ஆன மனுதாரரின் சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்யாமல் முடித்து வைத்து, பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரருடைய சாட்சியான DW1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யும்பட்சத்தில் தான் மனுதாரரது தரப்பு வழக்கை நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியும். எனவே, அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கட்சியை நிரூபணம் செய்ய கடந்த 03.02.2026–ம் தேதி முடித்து வைக்கப்பட்ட DW1 சாட்சியை Recall செய்ய உத்தரவிடவேண்டிதும், மேற்படி வழக்கில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு கட்சியை நிரூபணம் செய்ய கடந்த 03.02.2026–ம் தேதி முடித்து வைக்கப்பட்ட DW1 சாட்சியை Re open செய்ய உத்தரவிடவேண்டியதும் அவசியமும், நியாயமுமாய் உள்ளது என்று கூறி, இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3. 2–மனுக்களிலும் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைச்சுருக்கம்,

மனுதாரரின் மனு பொய்யும், மோசடியும் ஆனது. சட்டப்படிக்கும், நியாயப் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடியாகத்தக்கது. இந்த எதிர்மனுதாரர் வியக்தமாய் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளே மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுச்சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. கட்டளை 18, விதி 17 மற்றும் பிரிவு 151–சிபிசி தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. மனு அபிடவிட்டில் கூறப்பட்டுள்ள காரணங்கள் உண்மையில்லை. மனுதாரருக்கு கடந்த 03.02.2026–தேதியில்

உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்று கூறியுள்ளது உண்மையில்லை. மனுதாரர் வழக்கின் ஆரம்ப காலத்திலேயே வாதி தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பின்னர், 3–மனுக்களை மனுதாரர் தாக்கல் செய்து, செலவுத்தொகையுடன் மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, பிரதிவாதி தரப்பு சாட்சியை மீண்டும் வரவழைக்க தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கத்தக்கதல்ல. அசல் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, செலவுத்தொகையுடன் இம்மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிடவில்லை.

5. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது, மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்று, இம்மனுக்கள் அனுமதிக்கக்கூடியதா என்பதாகும்.

<u>தீர்வு</u>

6. மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தில், அசல் வழக்கில் மனுதாரர் பி.சா.1–ஆக முதல் விசாரணை செய்யப்பட்டு, பின்னர் குறுக்கு விசாரணைக்காக வாய்தா இடப்பட்டிருந்தபோது, அவர் உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும் அதனால், பி.சா.1–ன் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது என்றும் பி.சா.1–சாட்சியை குறுக்கு விசாரணை செய்தால் தான், மனுதாரரின் வழக்கை நிரூபிக்க முடியும் என்றும் அதனால், அசல் வழக்கை மறுதிறப்பு செய்து, பி.சா.1–ஐ மீண்டும் வரவழைக்க உத்தரவிடவேண்டும் என்று வாதிட்டார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தில், மனுதாரரின் மனு அபிடவிட்டில், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்று கூறியுள்ள காரணம் உண்மையில்லை என்றும் அசல் வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகளை மனுதாரர் தரப்பில் குறுக்கு

விசாரணை செய்யாததால் மனுதாரருக்கு எதிராக ஏற்கனவே ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் பின்னர் அதை ரத்து செய்ய மனுதாரர் தாக்கல் செய்த மனுக்கள் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டது என்றும் அதன்பின்னரும் மனுதாரர் குறுக்கு விசாரணைக்காக ஆஜராகாததால் அவரின் சாட்சியம் முடிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் அதனால், இம்மனுக்களை மனுதாரர் மீண்டும் தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும் அதனால், இம்மனுக்களை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

8. இரு தரப்பு ஆவணங்களும், வாதங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

9. மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கு புரோநோட்டின்பேரில் மனுதாரர் பெற்ற கடனை திருப்பிச்செலுத்த வேண்டும் என்று கோரி எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர் பி.சா.1–ஆக முதல் விசாரணை செய்யப்பட்டு, பின்னர் குறுக்கு விசாரணைக்காக வாய்தா இடப்பட்டபோது அவர் ஆஜராகாததால், பி.சா.1–சாட்சியம் முடித்து, உத்தரவிடப்பட்டது. மேற்படி உத்தரவை ரத்து செய்து, பி.சா.1–சாட்சியை குறுக்கு விசாரணைக்காக மீண்டும் வரவழைக்க உத்தரவிடவேண்டும் என்று கோரி மனுதாரர் இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளார்.

10. பிசா.1–குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாததற்கு காரணமாக அவருக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான ஆதாரங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேலும், வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில், அசல் வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாததால், மனுதாரருக்கு எதிராக ஏற்கனவே ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பின்னர், அதை ரத்து செய்யவேண்டும் என்று கோரி, மனுதாரர் ஐ.எ.எண். 5/2025, 6/2025, 7/2025–ஆகிய மனுக்களை தாக்கல் செய்துள்ளார். அவைகள் செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்னர் அசல் வழக்கு மனுதாரர் தரப்பில், மனுதாரர் பி.சா.1–ஆக முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். பின்னர், 18.11.2025–முதல் 03.02.2026–வரை 9–வாய்தாக்கள் பி.சா.1–குறுக்கு விசாரணைக்காக வாய்தா

இடப்பட்டு, மனுதாரர் ஆஜராகாததால் பி.சா.1−சாட்சியம் முடித்து உத்தரவிடப்பட்டது. ஆகவே, மேற்படி விவரங்களை பார்க்கும்போது, இவ்வழக்கு கடந்த 2020−ல் தாக்கல் செய்யப்பட்டு, தற்போது வரை மனுதாரரின் நடவடிக்கைகளால் விசாரணை முடிவு பெறாமல் உள்ளது. ஆனாலும், மனுதாரரின் நடவடிக்கைகளால், அசல் வழக்கில் காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும், அசல் வழக்கில் இரு தரப்பினருக்கும் உரிய வாய்ப்பு வழங்கவேண்டும் என்பதாலும் அவ்வாறு இரு தரப்பினருக்கும் உரிய வாய்ப்பு வழங்கி, அசல் வழக்கை முடிவு செய்தால் தான் இறுதியாக இருக்கும் என்பதாலும் இம்மனுக்களை செலவுத்தொகை விதித்து, அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்டவாறு மனுதாரரின் நடவடிக்கைகளால் அசல் வழக்கில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாலும், அசல் வழக்கில் மனுதாரர் பல்வேறு மனுக்களை தாக்கல் செய்து, எதிர்மனுதாரருக்கு சிரமம் ஏற்படுத்தியுள்ளதாலும், அதற்கேற்ப, கீழ்க்கண்டவாறு அதிக செலவுத்தொகை விதித்து, இம்மனுக்களை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, IA.12/2026, IA.13/2026− ஆகிய இம்மனுக்கள் மனுதாரர் மொத்த செலவுத்தொகையாக ரூ.2,000/−த்தை, எதிர்மனுதாரருக்கு 29.04.2026−க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனுக்கள் அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில், இம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுமென்றும் உத்தரவிடப்படுகிறது. வாய்தா − 29.04.2026.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026−ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16−ம் நாள் அவையறியத் தீர்ப்பு பகரப்பட்டது.

S NALINAKUMAR
Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.04.16 15:25:30 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்</u>
இல்லை.

S NALINAKUMAR
Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.04.16 15:25:36 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.